Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.301/2022

Dated 09-01-2026
Deposition of witness for : PW 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அனிதாகிரேஸி | வயது | : | 49 |
| தந்தை பெயர் | : | ஹரி ஞானராஜ் | தாலுக்கா | : | திருச்சி |
| கிராமம் | : | திருச்சி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருவாரூர் மாவட்டம் முத்துபேட்டை கடலோர பாதுகாப்பு குழுமத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 20.4.2022 அன்று நான் கபிஸ்தலம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது காவல் நிலைய கு.எண்.200/2022 பிரிவு 294(பி) 302 இ.த.ச வழக்கினை

கோப்பினை விசாரணைக்கு அன்று 21.00 மணிக்கு எடுத்துக்கொண்டேன். 21.30 மணிக்கு சம்பவ இடமான பட்டுக்குடி எதிரியின் வயல் அருகில் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் யோகேஸ், சிவராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தேன். வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் அ.சா.ஆ.11 ஆகும். சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன்.

3) பின்பு சம்பவ இடத்தில் பிச்சை என்பவரின் ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவும் ரத்தம் தோயாத மண் சிறிதளவும் ரசாயன பகுப்பு ஆய்வுக்காக அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன்.

4) பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் அர்ச்சுணன், புஸ்பவள்ளி, சந்திரசேகரன், பிரபு, சுப்பிரமணியன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளை விசாரித்த வகையில் இவ்வழக்கில் இறந்துபோன பிச்சையின் கொலைக்கு தூண்டுதலாக இருந்த எதிரி ரமேஸின் அம்மா ராஜலட்சுமி இருப்பது தெள்ள தெளிவாக தெரியவந்ததால் இவ்வழக்கில் 2 வது எதியாக சேர்த்து பிரிவு 294(பி), 302 இ.த.ச. பிரிவில் இருந்து 294(பி) , 109, 302 இ.த.ச ஆக பிரிவு மாற்றம் செய்தேன்.அந்த பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.12 ஆகும்.

5) பின்பு கொலையுண்டு இறந்த பிச்சையின் பிரேதமானது அய்யம்பேட்டை அரசு மருத்துவமனை சவகிடங்கில் இருந்ததால் அங்கு சென்று பிரேதத்தை பார்வையிட்டு சாட்சிகள் வடிவேல், அறிவானந்தம், சந்திரசேகர், செந்தில்குமார், சேகர் ஆகியோர்கள்

முன்னிலையில் இரவு 1.30 மணிக்கு பிரேத விசாரணை செய்து 3.30 மணிக்கு பிரேத விசாரணையை முடித்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.13 ஆகும்.

6) பின்பு சாட்சி விஜய் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.4.2022 அன்று இறந்தவரின் உடலை இறப்பின் காரணம் அறியும் பொருட்டு த.கா. பாலமுருகன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்துடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் இதுதான். அது அ.சா.ஆ.14 ஆகும்.

7) பின்னர் வழக்கின் எதிரியை தேடி சென்றபோது கிடைத்த ரகசிய தகவலின் படி 2 வது எதிரி ராஜலட்சுமி என்பவரை 22.4.2022 அன்று சுமார் 15.00 மணிக்கு கருப்பூர் பஸ்டாப் அருகே சாட்சிகள் கார்த்திகேயன், மணிகண்டன் ஆகியோர் முன்பு காரணம் கூறி கைது செய்தேன். அப்போது 2 வது எதிரியை விசாரித்தபோது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின்போது இறந்துபோன பிச்சையின் ரத்தம் பட்ட 1 வது எதிரி ரமேஸின் கைலியை தன்னுடைய வீட்டின் பின்புறத்தில் மறைத்து வைத்திருப்பதாகவும் தன்னை அங்கு அழைத்து சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொன்னார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.15 ஆகும்.

8) அதன்படி எதிரியை அதே சாட்சிகளுடன் அந்த எதிரியின் வீட்டிற்கு பின்பக்கமாக மாலை 16.30 மணியளவில் அழைத்து சென்றேன். அங்கு எதிரி மறைத்து வைத்திருந்த

ரத்தம் தோய்ந்த கைலியை எடுத்து ஆஜர் செய்தார். அதை நான் மகஜரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைலி இதுதான். அது சா.பொ.5. அதற்கான கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது.

9)பின்பு மாலை 5.00 மணியளவில் எதிரி மற்றும் கைப்பற்றிய தடய சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். தடய பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 இதுதான். அது அ.சா.ஆ.16 ஆகும். 22.4.2022 அன்று 1வது எதிரி ரமேஷ் தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் சரண் அடைந்து திருச்சி மத்திய சிறையில் இருந்தவரை 25.4.2022 அன்று கணம் நீதித்துறை நடுவர், பாபநாசம் அவர்களிடம் பிரமாண வாக்குமூலம் அறிக்கை தாக்கல் செய்து 26.4.2022 அன்று போலிஸ் காவலில் எடுத்து நிலையம் வந்து விசாரணை செய்து 15.00 மணிக்கு சாட்சிகள் முருகேசன், சரவணபவ முன்பாக தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றேன். அப்போது அவர் அவரது வீட்டின் பின்புறத்தில் உள்ள குளியலறை மேலே குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை மறைத்து வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்றால் எடுத்து தருவதாகவும் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கையெழுத்து போட மறுத்துவிட்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.17 ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தபிறகு மேற்படி எதிரியையும் சாட்சிகளையும் அழைத்து கொண்டு எதிரியின் வீட்டிற்கு 16.00 மணிக்கு சென்றோம்.

அங்கு எதிரி ரமேஸ் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அருவாளை எடுத்து ஆஜர் செய்தார். அந்த அருவாளை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுகை மகஜர் அ.சா.ஆ.18 ஆகும். அன்றே விசாரணை முடித்து எதிரி ரமேஸை நீதிமன்ற காவலுக்கு மீண்டும் ஒப்படைத்தேன்.

(மேற்படி சாட்சி நீதிமன்றத்தில் பொறுப்பின்றி சாட்சியம் அளித்த காரணத்தினாலும் முறையாக சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தினாலும் வழக்கு கோப்பை நன்கு படித்துவிட்டு மீண்டும் சாட்சியம் அளிக்க 12.1.2026 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்